**வணக்கம்**

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்—நாராயணசாமி

தேதி 29.4.2025 நேரம் மாலை 6.10 மணி

---------------------------------------------------------------

<u>தலைப்புச் செய்திகள்</u>

- நாட்டின் கல்வி முறையை, 21-ஆம் நூற்றாண்டின் தேவைக்கு ஏற்ப மாற்றும் பணிகளில் அரசு ஈடுபட்டுள்ளதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறி உள்ளார்.
- பசுமை ஹைட்ரஜன் தொழில் நுட்பங்களின் மேம்பாட்டில் சிறு-குறு மற்றும் நடுத்தர தொழில் துறையினர் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும் என, மத்திய அமைச்சர் திரு பிரல்ஹாத் ஜோஷி வலியுறுத்தி உள்ளார்.
- இளம் மருத்துவர்கள், மருத்துவ சேவைத் துறையின் வரலாற்றில் இடம் பெறும் விதத்தில் செயல்பட வேண்டும் என புதுச்சேரி துணை நிலை ஆளுநர் திரு கைலாஷ்நாதன் கூறி உள்ளார்.
- புதுச்சேரி இந்திராகாந்தி மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தில், அதிநவீன சி.டி ஸ்கேன் கருவி, மற்றும், 12 ஆம்புலன்ஸ் வாகனங்களை, முதலமைச்சர் திரு ரங்கசாமி தொடக்கி வைத்தார்.

<u>*மோடி-கல்விz*</u>

நாட்டின் கல்வி முறையை, 21-ஆம் நூற்றாண்டின் தேவைகளுக்கு ஏற்ப மாற்றும் பணிகளில் அரசு ஈடுபட்டுள்ளதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறி உள்ளார். கல்வி, தொழில் மற்றும் புதுமையாக்கத் துறையின் பிரதிநிதிகளுக்கும் அரசுக்கும் இடையே புதுடெல்லி பாரத் மண்டபத்தில் இன்று நடைபெற்ற யுகம் மாநாட்டில் பிரதமர் பேசுகையில்,நாட்டின்

எதிர்காலம் இளைஞர்களை நம்பி இருப்பதால் ஒளிமயமான எதிர்காலத்திற்கு இளைஞர்களை தயார் படுத்துதல் அவசியம் என்றார்.பிரதமரின் உரை குறித்து கூடுதல் விவரங்கள்.............

ே□ாடி-கல்வி (வாய்ஸ்)

புதிய கல்விக் கொள்கை, நாட்டில் புரட்சிகரமான மாற்றங்களை உருவாக்கி வருவதாக பிரதமர் தெரிவித்தார். இந்தியாவின் பல்கலைக் கழக வளாகங்கள், இளைஞர்கள் மூலம் புதுமையான படைப்புகளை உருவாக்கும் கேந்திரங்களாக மேம்பட்டு வருவதாக அவர் கூறினார். ஒரே நாடு -ஒரே சந்தா திட்டத்தின் மூலம் உலகத் தரம் வாய்ந்த அறிவு, ஒவ்வொரு மாணவருக்கும் கிடைப்பதை அரசு உறுதிப்படுத்தி இருப்பதாக அவர் தெரிவித்தார்.

ஐஐடி உயர்கல்வி நிறுவனங்களில் மாணவர் சேர்க்கை இடங்களின் எண்ணிக்கையை உயர்த்த முடிவு செய்யப் பட்டுள்ளதாகவும், ஐஐடி-எய்ம்ஸ் ஒத்துழைப்பு மூலம், மருத்துவ தொழில் நுட்பத்தில், பல படிப்புகள் தொடக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

தகவல் தொழில் நுட்பத்தின் பயன்பாடு மற்றும் மேம்பாட்டில், முன்னணி நாடுகளில் ஒன்றாக இந்தியா திகழும் நிலையில், அடுத்த கட்டமாக, செயற்கை நுண்ணறிவை இந்தியாவில் உருவாக்குவோம் என்ற தொலைநோக்கு பார்வையுடன் அரசு செயல்பட்டு வருவதாக பிரதமர் தெரிவித்தார். இதன் ஒரு பகுதியாகவே, இண்டியா-ஏஐ இயக்கம் தொடக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் கூறினார்.

_மோடி-கல்வி_

யுகம் மாநாட்டின் தொடக்க விழாவில், மத்திய கல்வி அமைச்சர் திரு தர்மேந்திர பிரதான், அறிவியல் தொழில் நுட்பத் துறை அமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் உள்ளிட்டவர்களும், கலந்து கொண்டனர்.

_மோடி-கனடா_

கனடா நாடாளுமன்றத் தேர்தலில் பிரதமர் பதவிக்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள திரு மார்க் கார்னி-க்கு, பிரதமர் திரு நரேந்திர மோடி வாழ்த்து தெரிவித்துள்ளார். இந்தியாவும், கனடாவும், பொதுவான ஜனநாயக மாண்புகளை பகிர்ந்து கொள்ளும் நாடுகள் என்றும் சட்டத்தின் ஆட்சி மற்றும் மக்கள் நிலையிலான தொடர்புகளில் இருநாடுகளுக்குமே நம்பிக்கை இருப்பதாகவும் சமூக ஊடகத்தில் பிரதமர் கூறி உள்ளார். திரு மார்க் கார்னியுடன் இணைந்து செயல்பட்டு கூட்டாண்மை உறவுகளை வலுப்படுத்திக் கொள்ளவும் இருநாட்டு மக்களுக்கு கூடுதல் வாய்ப்புகளை திறந்து விடவும் தாம் ஆர்வம் கொண்டுள்ளதாக திரு நரேந்திர மோடி மேலும் தெரிவித்துள்ளார். டிரினிடாட் மற்றும் டொபாகோவில் நாடாளுமன்ற தேர்தலில் வெற்றி பெற்றுள்ள திருமதி கமலா பிரசாத் பிசேசா-ருக்கும், பிரதமர் திரு நரேந்திர மோடி வாழ்த்து தெரிவித்துள்ளார்.

_பிஜேபி-காங்கிரஸ்_

பிரதமர் திரு நரேந்திர மோடியை விமர்சிக்கும் வகையிலான படத்துடன் காங்கிரஸ் இன்று சமூக ஊடகத்தில் வெளியிட்டுள்ள பதிவை பிஜேபி கடுமையாக ஆட்சேபித்துள்ளது. பஹல்காம் தீவிரவாத தாக்குதலுக்கு பிந்தைய முக்கியமான இத்தருணத்தில் நாட்டை பலவீனப்படுத்தவே காங்கிரஸ் முயலுவதாக, பிஜேபி செய்தி தொடர்பாளர் திரு கவுரவ் பாட்டியா இன்று புதுடெல்லியில் செய்தியாளர்களிடம்

பேசுகையில், குற்றம் சாட்டினார். இத்தகைய பதிவுகள் மூலம், காங்கிரஸ், பாகிஸ்தான் பக்கம் நிற்பதையே வெளிப்படுத்திக் கொள்வதாகவும் பஹல்காம் சம்பவம் குறித்து சில காங்கிரஸ் தலைவர்கள் வெளியிடும் கருத்துக்கள் இதே வகையில் தான் அமைந்திருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

பாரதிய ஜனதா கட்சியின் மற்றொரு செய்தி தொடர்பாளர் திரு ஷெஜாத் பூனாவாலா, செய்தியாளர்களிடம் பேசுகையில், பஹல்காம் தீவிரவாத தாக்குதல் குறித்து சிறப்பு நாடாளுமன்றக் கூட்டம் நடத்த வேண்டும் என்று காங்கிரஸ் கூறுவதை ஆட்சேபித்தார். தீவிரவாதிகளுக்கு எதிரான நடவடிக்கைகளில் அரசின் பக்கம் நிற்பதாக அனைத்து கட்சிக் கூட்டத்தில் காங்கிரஸ் கூறிய அதே வேளை காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த கர்நாடக முதலமைச்சர், பாகிஸ்தான் மீது நடவடிக்கை கூடாது என்று பேசி இருப்பதை அவர் சுட்டிக்காட்டினார். பிரச்சனையில் காங்கிரஸ் கட்சியின் ஒட்டுமொத்த நிலைப்பாடு என்ன என்பதை, அக்கட்சியின் தலைவர் தெளிவு படுத்த வேண்டும் என்றும் திரு பூனாவாலா வலியுறுத்தினார்.

<u>கோவில்-நடை</u>

உத்தராகண்டில், நடப்பாண்டிற்கான சார்தாம் யாத்திரை தொடங்குவதை குறிக்கும் வகையில், அட்சய திருதியை தினமான நாளை, புகழ்பெற்ற கங்கோத்ரி மற்றும் யமுனோத்ரி கோவில்களில் நடை திறக்கப்படுகிறது. முதல் கட்ட சார்தாம் யாத்திரை நடைமுறைகள் சுமுகமான முறையில் தொடங்குவதை உறுதிப்படுத்த சிறப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. பக்தர்களுக்கான தகவல் மையங்கள். மருத்துவ முகாம்கள் உட்பட பல்வேறு வசதிகளுக்கு மாவட்ட நிர்வாகம் சார்பில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. யாத்திரை பாதை முழுவதிலும் பாதுகாப்பு வலுப்படுத்தப் பட்டுள்ளது. சார்தாம் யாத்திரைத் தலங்களில், 3-ஆவது யாத்திரைத் தலமான கேதார்நாத்தில் கோவில் நடை, மே 2-ஆம் தேதியன்றும், பத்ரிநாத்தில் மே 4-ஆம் தேதியன்றும், திறக்கப்படும்.

***பசுை□-ஹைட்ரஜன்***

எதிர்காலத்தின் எரிபொருளாக உருவெடுத்து வரும் பசுமை ஹைட்ரஜன் உற்பத்திக்கான தொழில் நுட்பங்களை மேம்படுத்துவதில் சிறு-குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும் என, புதிய மற்றும் புதுப்பிக்க வல்ல எரிசக்தி துறைக்கான மத்திய அமைச்சர் திரு பிரல்ஹாத் ஜோஷி கூறி உள்ளார். தேசிய பசுமை ஹைட்ரஜன் இயக்கத்தில், சிறு-குறு மற்றும் நடுத்தர தொழில் துறைக்குள்ள வாய்ப்புகள் குறித்து புதுடெல்லியில் இன்று நடைபெற்ற பயிலரங்கை தொடக்கி வைத்துப் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

***பசுை□-ஹைட்ரஜன்***

புதுப்பிக்க வல்ல எரிசக்தி துறையில் உற்பத்தி மற்றும் பொறியியல் உதவிகளையும் புதிய தொழில்நுட்பங்களுக்கான உத்தேசங்களையும் வழங்கும் சக்தி சிறு-குறு மற்றும் தொழில் துறைக்கு இருப்பதாக, மத்திய அமைச்சர் திரு பிரல்ஹாத் ஜோஷி தெரிவித்தார்.

நாட்டில் பசுமை எரிசக்தி உற்பத்தியை உறுதிப்படுத்துவதற்கான சான்றிதழ் திட்டத்தை, அமைச்சர் இந்நிகழ்ச்சியின் போது தொடக்கி வைத்தார். பசுமை ஹைட்ரஜனில் இருந்து பெறப்பட்டு, மீண்டும் வேறு இடங்களில் பசுமை ஹைட்ரஜன் தயாரிக்க பயன்படும் பசுமை அம்மோனியா போன்ற, 4 லட்சத்து 12 ஆயிரம் டன் ரசாயனப் பொருட்களை ஜப்பானில் இருந்து இறக்குமதி செய்ய, இந்தியா அந்நாட்டுடன் உடன்பாடு செய்து கொண்டுள்ளதாக அவர் தெரிவித்தார். 2030-ஆம் ஆண்டிற்குள் இதை 5 லட்சம் டன்னாக உயர்த்தும் இலக்குடன் பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையிலான அரசு செயல்பட்டு வருவதாக அவர் மேலும் குறிப்பிட்டார்.

**கைலாஷ்நாதன்**

மருத்துவர்களின் சேவை, மனித குலத்திற்கே தேவை என்பதால், மருத்துவ படிப்பு முடிக்கும் மாணவர்கள், மருத்துவ சேவைத் துறையின் வரலாற்று ஏடுகளில் தங்களின் பெயர் பொறிக்கப்படும் விதத்தில் செயல்பட வேண்டும் என புதுச்சேரி துணை நிலை ஆளுநர் திரு கைலாஷ்நாதன் கூறி உள்ளார். இன்று புதுச்சேரியில் வெங்கடேஸ்வரா மருத்துவக் கல்லூரியின் 11-ஆவது பட்டமளிப்பு விழாவில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு படிப்பு முடித்த மாணவர்களுக்கு, பட்டங்கள் மற்றும் பதக்கங்களை வழங்கி உரையாற்றினார். இளம் மருத்துவர்கள், கிராமப்புறங்களில் பணியாற்ற ஆர்வம் காட்ட வேண்டும் என்றும், துறை தொடர்பான தொழில் நுட்ப புதுமைகளை உடனுக்குடன் அறிந்து கொண்டு பயன்படுத்த வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார். தற்போது படிப்பு முடிக்கும் மருத்துவ மாணவர்களில் பலர், கொரோனா காலத்திலும் பணி புரிந்திருக்கலாம் என்பதை துணை நிலை ஆளுநர் சுட்டிக்காட்டி, மற்றவர்களுக்கு கிடைக்காத இந்த வாய்ப்பில், கருணையுடன் கூடிய அணுகுமுறை குறித்துக் கற்றுக் கொண்ட பாடங்களை, இவர்கள், தங்களின் தொழில் முறை வாழ்க்கையிலும் தொடர்ந்து பயன்படுத்த வேண்டும் என்றார்.

***புதுச்சேரி-ரங்கசாமி***

புதுச்சேரி இந்திராகாந்தி மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தில், ஜென்ரல் இன்ஷுரன்ஸ் நிறுவனத்தின் சிஎஸ்ஆர் நிதி மூலம் 10 கோடி ரூபாய் செலவில் வாங்கப்பட்டுள்ள, அதிநவீன சி.டி ஸ்கேன் கருவி, மற்றும், உயிர் காப்பு வசதிகளுடன் கூடிய 12 ஆம்புலன்ஸ் வாகனங்களின் பயன்பாட்டை இன்று முதலமைச்சர் திரு ரங்கசாமி தொடக்கி வைத்தார். சட்டப்பேரவைத் தலைவர் திரு ஆர் செல்வம், சட்டமன்ற உறுப்பினர் திரு கே எஸ்பி ரமேஷ், சுகாதாரத் துறை செயலர் திரு ஜெயந்த் குமார் ரே, ஜென்ரல் இன்ஷுரன்ஸ் நிறுவனத்தின் மேலாண்

இயக்குநர் திரு ராமசாமி நாராயணன் உள்ளிட்டோர் விழாவில் கலந்து கொண்டனர்.

*பாரதி தாசன்*

பாவேந்தர் பாரதிதாசனார் பிறந்த நாளான இன்று புதுச்சேரியில், பாரதி பூங்காவில் உள்ள பாவேந்தர் சிலைக்கு, துணை நிலை ஆளுநர் திரு கைலாஷ்நாதன், முதலமைச்சர் திரு ரங்கசாமி, சட்டப்பேரவைத் தலைவர் திரு ஆர் செல்வம், அமைச்சர்கள் திரு லட்சுமி நாராயணன், திரு திருமுருகன், திரு சாய் ஜெ சரவணன் குமார் உள்ளிட்டோர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். தொடர்ந்து, பெருமாள் கோவில் வீதியில் உள்ள பாவேந்தர் நினைவு அருங்காட்சியகத்தில், அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த, பாவேந்தர் திருவுருவப் படத்திற்கும், துணை நிலை ஆளுநர், முதலமைச்சர் ஆகியோர் தலைமையில், மலர் தூவி மரியாதை செலுத்தப்பட்டது.

*காரைக்கால்-மலேரியா*

காரைக்காலில் சுகாதாரத் துறை சார்பில் இன்று நடைபெற்ற மலேரியா தடுப்பு விழிப்புணர்வு பேரணியை, மாவட்ட ஆட்சியர் திரு சோமசேகர அப்பாராவ், தடுப்பூசி பிரிவு துணை இயக்குநர் டாக்டர் சிவராஜ்குமார் ஆகியோர் கொடி அசைத்து தொடக்கி வைத்தனர். சுகாதாரத் துறையில் பணி புரியும் உதவியாளர்கள் மற்றும் ஆய்வாளர்களும் அன்னை தெரசா சுகாதாரக் கல்வி நிறுவனத்தில் பயிலும் மாணவர்களும் இதில் கலந்து கொண்டு, மலேரியா தடுப்பிற்கான விழிப்புணர்வு பிரச்சாரத்தில் ஈடுபட்டனர்.

**ஐபிஎல்**

ஐபிஎல் கிரிக்கெட்டில் இன்று இரவு 7.30 மணிக்கு டெல்லியில் நடைபெறும் போட்டியில், டெல்லி-கொல்கத்தா அணிகள் மோத உள்ளன. நேற்று இரவு ஜெய்ப்பூரில் நடைபெற்ற போட்டியில் ராஜஸ்தான் அணி, 8 விக்கெட் வித்தியாசத்தில், குஜராத் அணிக்கு எதிராக வெற்றி பெற்றது. ராஜஸ்தான் அணியின் 14 வயது இளம் வீரர் வைபவ் சூரியவம்சி 38 பந்துகளில் 101 ரன் எடுத்து, மிகக் குறைந்த வயதில் சதம் அடித்த வீரராக சாதனை படைத்தார்.

**வெடி குண்டு மிரட்டல்**

புதுச்சேரியில் இன்று மீண்டும், முதலமைச்சர் வீட்டிற்கும் பிரஞ்ச் தூதரகம் மற்றும் ஜிப்மர் மருத்துவமனைக்கும் மர்ம நபர்கள் வெடி குண்டு மிரட்டல் விடுத்த போதிலும், போலீசார் மற்றும் வெடிகுண்டு நிபுணர்கள் முழுமையான சோதனை மேற்கொண்டு, இது வெறும் புரளி என்பதை உறுதிப்படுத்தினர்.

**மே□ற்கு வங்கம்**

மேற்கு வங்க மாநிலம் கிழக்கு மேதினிபூர் மாவட்டத்தில் உள்ள தீகா நகரில், நாளை நடைபெற உள்ள ஜகந்நாதர் கோவில் குடமுழுக்கு விழாவிற்கான யாகசாலை பூஜைகள், இன்று காலை தொடங்கி சிறப்பாக நடைபெற்று வருகின்றன. பூரி ஜகந்நாதர் கோவில் மற்றும் இஸ்கான் அமைப்பைச் சேர்ந்த புரோகிதர்கள் பூஜைகளை நடத்தி வருகின்றனர். தீகா நகரில் நாளை கலாச்சார மையமும் திறக்கப்பட உள்ளது.

இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது.

-----------------------